කම්කරු හා වෘත්තීය සමිති සබඳතා හා සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශය
**தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு**
**Ministry of Labour, Trade Union Relations and Sabaragamuwa Development**

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report
# 2017

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය
**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**National Institute of Labour Studies**


නො 267, පන්නිපිටිය පාර, පැලවත්ත, බත්තරමුල්ල
இல.267, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுல்லை.
**No 267, Pannipitiya Road, Palawatta, Battaramulla**

**கௌரவ அமைச்சரின் செய்தி**



தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகமானது தான் தாபிக்கப்பட்டதன் நோக்கங்களுக்கமைய, தொழிற் கற்கைகள் துறையில் ஊழியர்களது அறிவு, திறன், என்பவற்றில் விருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களிடையே சிறந்த மனப்பாங்குகளை உருவாக்கும் நோக்கில் இவ்வருடத்தில் தனது பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

அரச நிறுவனங்கள், பகுதி அரச நிறுவனங்களைப் போன்றே தனியார் துறை நிறுவனங்களில் சேவையாற்றுகின்ற பணியாளர்களைக் கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளானது, அவர்களது உரிமைகளைப் பாதுகாக்கப்படுவதோடு, நிறுவனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் வாயிலாக சிறந்த அலுவலகச் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், பாரிய பங்களிப்பைச் செய்துள்ளன என நான் நம்புகின்றேன்.

இந்நடவடிக்கைகளை முறையாக முன்னெடுப்பதற்காக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்திற்கு புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி, தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிகழச்சிகளை நவீனமயப்படுத்தி, தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் உறவுகளை வலுப்படுத்தி, தமது ஆளனியினரது தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து முன்னோக்கிப் பயணிக்கத்தக்க விதத்தில் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

கடந்த வருடத்தில் நிறுவனத்தின் இலக்குகளை பூரணப்படுத்தி அமைச்சின் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக பங்களித்த தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் தலைவர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அனைத்து ஆளனியினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டப்ளியு.டீ.ஜே.செனவிரத்ன**
**தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர்**

**கௌரவ தலைவரின் செய்தி**



நிறுவனங்களது வினைத்திறனையும் விளைதிறனையும் மேம்படுத்துவதைப் போன்றே வேலைத்தலங்களிலுள்ள ஊழியர்களது உரிமைகளைப் பாதுகாத்து சிறந்த வேலைச் சூழலை கட்டியெழுப்புவதற்காக, அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட சிறந்த மனப்பாங்குள்ளவர்களை உருவாக்குவது இன்றியமையாததாகும். அதன் மூலமாக தேசிய அபிவிருத்திக்கென தம்மை அர்ப்பணித்து செயலாற்றும் ஊழியர்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்கு, சிறந்த வகையில் பங்களிப்புச் செய்ய முடியும். அதற்காக டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள், செயலமர்வுகள், மாநாடுகளை நடாத்துதல் போன்ற, பயிற்சி மற்றும் அபிவிருத்தி கருவிகளை நிறுவனம் பயன்படுத்துகின்றது. அதனூடாக இலக்கு நோக்கிய செயன் முறையில் தம்மை ஈடுபடுத்தி 2017 ஆம் ஆண்டில் முழுமையான முன்னேற்றத்தை எட்டக்கூடிய வாய்ப்பை நிறுவனம் பெற்றுள்ளமையையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வருடத்தில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்காக, இந்நிறுவனமானது வெளியார் வளவாளர்களது உதவிகளைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அனுசரணையையும் பெற்றுள்ளது. அம்முயற்சியை வெற்றி கொள்வதற்காக, திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலமாக கிடைத்த அளப்பரிய பங்களிப்பை இங்கு குறிப்பிடுதல் சாலச் சிறந்ததாகும்.

2017ஆம் ஆண்டில் அமைச்சினால் வழங்கப்பட்ட தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல் மூலமாக வினைத்திறனாக தமது இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பங்களிப்புச் செய்த தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதில் தொழில்புரியும் ஆளனியினருக்கு எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**தலைவர்**
**எஸ்.ஏ.நிமல் சரணதிஸ்ஸ**

**பணிப்பாளர் நாயத்தின் செய்தி**



அரச, பகுதி அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பயிற்சி மற்றும் அபிவிருத்தி மட்டில் ஆர்வம் செலுத்துகின்ற துறையினருக்கு ஒத்துழைப்பை வழங்கும் நோக்குடன் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தினால் 2017ஆம் ஆண்டு முழுவதும் பாடநெறிகளும் செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன. அத்தகைய தரப்பினருடன் கொண்டுள்ள நல்லுறவின் அடிப்படையில் அவர்களது பிரேரணைகள் மற்றும் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு நிகழ்ச்சிகளை நவீனமயப்படுத்தியும் புதிய நிகழச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தியும் வினைத்திறனாக பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதன் கீழ் நிறுவனத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள், செயலமர்வுகள் விசேடமானமை. இவ்விதத்தில் நிறுவனமானது அதன் நோக்கம் மட்டில் கவனம் செலுத்தி இந்நாட்டிலுள்ள ஊழியப்படையினருக்கு அவர்களது தனிப்பட்ட மற்றும் தொழில் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவர்களது அறிவு, திறன் என்பவற்றில் அபிவிருத்தியை எட்டுவதற்கான வாய்ப்புக்களை வழங்கும் விதமாக தமது பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்திருந்தது.

இதன்போது நிறுவனத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக பல்வேறு விதத்தில் பங்களிப்புச் செய்த, குறைந்தளவிலுள்ள எமது ஆளனியினரை நான் குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். அவ்வாறே ஓய்வுபெற்ற மற்றும் தற்போது சேவையிலுள்ள அரச சேவையின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தனியார் துறையின் சிரேஸ்ட உத்தியோகத்தர்கள், விடயம் சார் நிபுணர்கள் வழங்கிய பங்களிப்பு அளப்பரியதாகும்.

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகமானது தனது இலக்கு நோக்கிய பயணத்தில் முன்னோக்கிச் செல்வதற்கு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட சிரேஸ்ட உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வழிகாட்டல்களைப் போன்றே தொடர்ச்சியான ஊக்கப்படுத்தலும் எமக்கு பாரிய பக்கபலமாக அமைந்ததென்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

இறுதியாக நிறுவனம் மட்டிலும், நிறுவனத்தின் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டு தமது ஆளனியினரை பயிற்சிக்காக இங்கு அனுப்பி தமது ஒத்துழைப்புக்களை வழங்கிய, அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் உள்ளிட்ட தனியார் துறை நிறுவனங்களது தலைவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டீ.எம்.ஜே.டப்.தென்னகோன்**
**பணிப்பாளர் நாயகம்**

# உள்ளடக்கம்


பக்கம்

**1.0 நிறுவனத்தின் செயற்பாடுகள்** 1-7

1.1 நோக்கு, பணிநோக்கு மற்றும் நிறுவனத்தின் பெறுமதிகள்
1.2 நிறுவனத்தின் நோக்கங்கள்
1.3 நிறுவனத்தின் நிருவாகம்
1.4 ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு
1.5 நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்

**2.0 பயிற்சியும் அபிவிருத்தியும் 8-17**

2.1 டிப்ளோமாப் பாடநெறிகள்
2.2 சான்றிதழ் பாடநெறிகள்
2.3 குறுகிய கால மற்றும் தயாரிக்கப்பட்ட பாடநெறிகள்
2.4 நிறுவனத்தில் காணப்படும் வசதிகள்
2.5 வளவாளர்கள்
2.6 2017ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு ஆய்வு
2.7 தொழில் மற்றும் கைத்தொழில் உறவுகள்
2.8 மனிதவள முகாமைத்துவம்
2.9 வேலைத்தளத்தின் உற்பத்தித் திறன்

**3.0 நிதிக் கூற்றுக்கள்** 18-36

3.1 நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

3.2 நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று

3.3 நிதி சுற்றோட்ட கூற்று
3.4 மூலதன மாற்றங்கள் அறிக்கை
3.5 நிதிக் கூற்றுக்களது குறிப்பு

**4.0 கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை. 37-47**

# தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனம் (NILS)

## 1.0 நிறுவனத்தைப் பற்றி

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனமானது 2007 செம்டெம்பர் 11ஆந் திகதி, 2010ஆம் ஆண்டு 12ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் நியதிச்சட்ட நிறுவனமாக தாபிக்கப்பட்டது. இலங்கையில் தொழிற்கற்கைகளை மேம்படுத்தும் நோக்கில் ஆய்வுகளை நடாத்துதல், ஆராய்ச்சிகளை நடாத்துதல், ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் பயிற்சிகளை வழங்கும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நிறுவனம் தாபிக்கப்பட்டது. தற்போது, இந்நிறுவனமானது தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

## எமது நோக்கும் பணிநோக்கும்

### 1.1 நோக்கு

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தொழில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்.

**பணிநோக்கு**

1.1.1 கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சியின் ஊடாக வினைத்திறனான தொழில் உறவுகளைப் பேணுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக முத்தரப்பு பங்குதாரர்களுக்கு வசதிகளை வழங்குதல்.

**பிரதான பெறுமதிகள்**

- ❖ சேவைகள் தொடர்பான ஏற்பாடுகள்
- ❖ வாடிக்கையாளரை மையப்படுத்துதல்
- ❖ ஒத்துழைப்புடன் செயற்படுதல்
- ❖ மாற்றத்திற்குத் தயாராகுதல்

## 1.2 நோக்கங்கள்

சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள நோக்கங்களை இலக்கு வைத்து அடைந்து கொள்வதற்கு நிறுவனம் பாரியளவில் செயற்பட்டு வருகின்றது.

1. அபிவிருத்திச் செயற்பாடுகளின்போது, ஊழியர்களை தொடர்ச்சியான உதவியாளர்களாக மாற்றுவதற்காக, அவர்களது நலனோம்பலை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்காக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் ஊழியர் கற்கைகள் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
2. தொழிற்கற்கைகள் தொடர்பிலான மாநாடுகள், செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல் மற்றும் அதற்குப் புறம்பாக சஞ்சிகைகள், காலாண்டு சஞ்சிகைகள் மற்றும் நூல்களை வெளியிடுதல்.
3. தொழிற்கற்கைகளுடன் தொடர்புடைய ஆய்வுகளை நடாத்துதல், மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் கற்கை நெறிகளை நடாத்துதல்.
4. நூலக மற்றும் தகவல் சேவைகளைத் தாபித்து அவற்றைப் பேணிச் செல்லுதல்.
5. சமமான நோக்கங்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் அமைப்புக்களுடனும் மிக நெருக்கமான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
6. பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்களுடன் இணைந்த வகையில் தொழிற்கற்கைகள் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறிகள் உள்ளிட்ட பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் அவ்வாறு தேவைப்படுகின்ற சந்தர்ப்பத்தில் சான்றிதழ்களையும் டிப்ளோமா சான்றிதழ்களையும் வழங்குதல்.
7. தொழில் நல்லிணக்கத்தைப் பேணுவதற்கான இலக்குகளை அமைக்கும்போது, இலக்கு வைக்கப்பட்ட செயற்பாடுகளை மேம்படுத்துதலும் தொடர்புபடுத்துதலும்.

## 1.3 நிறுவனத்தின் நிருவாகம்

இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் நிறுவனத்தின் நடவடிக்கைகள், நிறுவனத்தின் நிருவாக சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சபையானது தொழில் பிரிவினது முத்தரப்பைச் சார்ந்த பங்குதாரர்கள் மற்றும் பிரதிநிதிகளைக் கொண்டுள்ளது. அதாவது தொழில் தருனர்கள், ஊழியர்கள் (தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி) மற்றும் உரிய துறைசார் நிபுணர்கள் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் சட்டத்தின் ஊடாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்குக் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தொழில் அமைச்சரால் நிறுவனத்தின் நிருவாக சபை நியமிக்கப்படுகின்றது.

**2017 ஆண்டிற்கான நிறுவனத்தின் நிருவாக சபை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

1) திரு.எஸ்.ஏ.நிமல் சரணதிஸ்ஸ – தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு – செயலாளர்.
2) திரு.ஏ.விமலவீர – தொழில் ஆணையாளர் நாயகம் - உபதலைவர்
3) திரு.டீ.எம்.ஜே.டப்.தென்னகோன் - பணிப்பாளர் நாயகம் - தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம்.
4) திருமதி.அமந்தா கருணாதிலக்க – அங்கத்தவர்
5) திருமதி.டீ.ஏ.எல்.இலேபெரும - அங்கத்தவர்
6) திரு.டப்.என்.எஸ்.விக்கிரமசிங்க - அங்கத்தவர்
7) பேராசிரியர் - பிரபாத் ஜயசஜங்க – அங்கத்தவர்
8) திரு.ஜே.எம்.என்.ஜயசிங்க - அங்கத்தவர்
9) திருமதி.இசன்கா சமன்மலி விஜேவர்தன - அங்கத்தவர்
10) திருமதி.சமந்தி சேனானாயக்க - அங்கத்தவர்
11) திரு.தர்ம ஸ்ரீ வீரசிங்க - அங்கத்தவர்
12) திரு.லெஸ்லி தேவேந்திர - அங்கத்தவர்
13) திரு.ரோஹன்பண்டித கோரலகே - அங்கத்தவர்
14) திரு.டப்.எம்.கே.எல்.வீரசிங்க - அங்கத்தவர்


## 1.4 நிறுவனத்தின் கட்டமைப்பு

பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றதிகாரியாக விளங்குவதுடன் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவர் நியமிக்கப்படுகின்றார். நிருவாக சபையினால் காலத்திற்குக் காலம் கையளிக்கப்படுகின்ற அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பணிப்பாளர் நாயகத்தையே சாரும்.

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனம் ஒன்றிற்கொன்று வேறுபட்ட மூன்று பிரிவுகளின் கீழ் செயற்படுகின்றது, அதாவது;

- ❖ பயிற்சி மற்றும் அபிவிருத்தி
- ❖ ஆய்வுகள், திட்டடமிடல் மற்றும் வெளியீடுகள்
- ❖ நிருவாகம் மற்றும் நிதி

**நிறுவனக் கட்டமைப்பு**



பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் கீழ் மூன்று அலகுகள் காணப்படுகின்றன. தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள், மனித வள முகாமைத்துவம் மற்றும் வேலைத் தளத்தில் விளைதிறனை விருத்தி செய்தல் என்பன அம்மூன்று அலகுகளாகும். தற்போது இவ்வலகுகளது செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது இரண்டு உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் பொறுப்புக் கூறுதல் வேண்டும். நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளதும் முன்னேற்றம், மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் கால அட்டவணைக்கேற்ப அறிக்கைகளைத் தயாரிப்பது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆய்வுகள், திட்டமிடல் மற்றும் வெளியீட்டு பிரிவுகள் பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

நிருவாக மற்றும் நிதிப் பிரிவுகளின் ஊடாக நிறுவனத்தின் அனைத்து நிருவாக மற்றும் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் நாயகம், உதவிப் பணிப்பாளர் (T&D) மற்றும் கணக்காளரது நேரடி மேற்பார்வையின் கீழ் அவை செயற்படுத்தப்படுகின்றன.

### 1.6 நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்

தமது தொழிலை விருத்தி செய்து கொள்ளவேண்டிய இலங்கையின் ஊழியப் படைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு சிறந்த தரம்மிக்க பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதன் ஊடாக பங்குபற்றுவோரது அறிவு, திறன், மற்றும் மனப்பாங்கினை விரிவடையச் செய்வதற்கு இந்நிறுவனம் பொறுப்புடன் செயற்படுகின்றது. தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய, பிரதான மூன்று விடயப்பரப்புகளுக்குரிய செயற்பாடுகள் இந்நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றன.

1. தொழிற் சட்டம் மற்றும் தொழில் உறவுகள்
2. மனித வள முகாமைத்துவம்
3. வேலைத்தளத்தில் விளைதிறனை விருத்தி செய்தல்.

சமூக உறவுகளது மேம்படுத்தல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு திட்டங்களது உள்ளடக்கங்களை விரிவு படுத்தல் ஊடாக தொழில் தருனர் மற்றும் தொழிலாளர்களது உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் முத்தரப்பு பங்குதாரர்களை வலுப்படுத்துதலுக்குத் தேவையான இலக்கு வைக்கப்பட்ட பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் அடித்தளத்தை இடுவதற்காக தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு பொறுப்புடன் செயற்படுகின்றது.

ஊழிய முகாமைத்துவத்தில் மிகச் சிறந்த செயற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக தமது ஆற்றலை விருத்தி செய்து கொள்வதன் ஊடாக உற்பத்தி மற்றும் சேவைகளை வழங்கும் செயற்பாட்டில் வினைத்திறனை அதிகரிப்பதற்காக தமக்குக் கீழ் உள்ள உத்தியோகத்தர்களது விருப்பினை வளர்த்துக் கொள்ளுதல் ஊடாக சந்தைச் சூழலை மாற்றுவதற்காக நிறுவனத்திலுள்ள ஊழியர்களை முகாமைத்துவம் செய்யும் செயற்பாடுகள் மற்றும் ஒழுக்கத்தினை மேம்படுத்துவதற்காக பாடநெறிகளை நடாத்துதல் என்பன மனிதவள முகாமைத்துவப் பிரிவின் நோக்கமாகும்.

மிகச் சிறந்த விளைதிறன் மிக்க வேலைத்தளமொன்றை உருவாக்குவதற்காக, ஊழியர்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காக, பயிற்சி மற்றும் அபிவிருத்தி பாடநெறிகளை நடாத்துதல், பிரச்சினைகளைத் தடுப்பதற்கான முற்செயற்பாட்டு அணுகுமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் மற்றும் பொருத்தமான சூழலை படிப்படியாக மாற்றுதல், வேலைத்தளத்தின் வினைத்திறன் மற்றும் விருத்தி செய்தல் பிரிவின் நோக்கமாகும்.




தீர்வுகளைக் காணுதல் மற்றும் கொள்கை விதப்புரைகளை ஏற்படுத்துவதற்காக தொழில் பிரிவில் காணப்படுகின்ற மற்றும் எழுகின்ற பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை பரிசோதித்து பகுப்பாய்வு செய்வதற்காக இந்நிறுவனத்தினால் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்குப் புறம்பாக, தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தினால் அரச, பகுதி அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் அவர்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் தொழில்சார் முறையில் பரீட்சைகள் நடாத்தப்படும். ஆய்வு ரீதியான வெளிப்படுத்தல்கள் மற்றும் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஜேர்னல், வார சஞ்சிகைகள், நூல்கள் என்பனவற்றை வெளியிடுதல், முத்தரப்பு பங்காளர்களது அங்கத்தவர்களுக்கு கல்வியை வழங்குவதில் தொடர்புபடுதல் என்பன இந்நிறுவனத்தின் முக்கிய கடமைகளாகும்.

மேலும், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, தொழில் திணைக்களம், ஏனைய அரச நிறுவனங்கள், பகுதி அரச நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் என்பவற்றுடன் ஒத்துழைப்புடன் இந்நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. மேலும், சர்வதேச தொழில் தாபனம், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு அலுவலகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள் போன்ற சர்வதேச அமைப்புக்களது செயலணியுடன் இணைந்து தேசிய தொழிற்

கற்கைகள் நிறுவனம் செயற்படுகின்றது. அவ்வாறே இந்திய அமைப்பான இந்தியாவின் வீ.வீ.கிரி தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்துடன் கலந்துரையாடல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.





### 2.0 பயிற்சி மற்றும் அபிவிருத்தி

டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பாடநெறிகள், குறுகிய கால பாடநெறிகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்றவை ஊடாக பரந்தளவான சேவைகள் இந்நிறுவனத்தினால் வழங்கப்படுகின்றன. மேலும் தமது ஊழியர்களின் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக தொழில் தருனர் சங்கங்களால் விடுக்கப்படுகின்ற விசேட கோரிக்கைக்கமைய தயாரிக்கப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. முகாமைத்துவ அபிவிருத்தி திட்டங்கள் ஊடாக பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவர்கள் தொடக்கம் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்கள் வரை அனைத்துத் தரப்பினருக்கும் நிறுவனத்தினால் சேவைகள் வழங்கப்படுகின்றன. தனியார் துறை, தொழிற்சங்க தலைவர்கள், அரச உத்தியோகத்தர்களைப் போன்றே தொழில் கொள்வோர் மற்றும் தொழில் கொடுப்போரது இயலுமையை விருத்தி செய்வதற்கு கல்வி மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும்.





### 2.1 டிப்ளோமாப் பாடநெறிகள்

அதன் அடிப்படை கற்றற் செயற்பாடாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் ஊடாக,

1. தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள்
2. மனித வள முகாமைத்துவம்
3. வேலைத்தளத்தில் உற்பத்தித் திறனுடன் தொடர்புடைய மிக உயர் நிபுணத்துவம் சார் மற்றும் தொழில்சார் மட்டத்திலான மூன்று டிப்ளோமா பாடநெறிகளும் நடாத்தப்படுகின்றுன.

### 2.2 சான்றிதழ் பாடநெறிகள்

வருடாந்தம் நிறுவனத்தின் ஊடாக மூன்று பாடங்களைக் கொண்டு 24 சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. அதாவது, தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள், மனித வள முகாமைத்துவம் மற்றும் டிப்ளோமாப் பாடநெறிகளது கற்றல் அலகுகளில் பங்குபற்றுதல், வேலைத்தளத்தின் வினைத்திறனை விருத்தி செய்தல்.

### 2.3 குறுகிய கால மற்றும் தயாரித்துக் கொள்ளப்பட்ட பாடநெறிகள்

பிரதான விடயப் பரப்புக்களைக் கொண்டதாக நிறுவனத்திளால் ஒரு நாள் தொடக்கம் 03 நாட்கள் வரையான பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. மேலும் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனத்தின் பயிற்சி நிலையங்களில் அல்லது கோரிக்கை விடுக்கின்ற நிறுவனங்களில் சேவை பெறும் நிறுவனங்களது கோரிக்கைக்கமைய இந்நிறுவனத்தினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.





## 2.4 வசதிகள்

அனைத்து பயிற்சி வசதிகளையும் கொண்ட முழுமையாக குளிரூட்டப்பட்ட கேட்போர் கூடங்கள் மற்றும் விரிவுரை மண்டபங்கள் இந்நிறுவனத்தில் காணப்படுகின்றன.





## 2.5 வளவாளர்கள்

நாட்டில் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய பாடத்திட்டங்களில் உயர் தகைமைகளைப் பெற்ற, மிகச் சிறந்த அனுபவங்களைக் கொண்ட வளவாளர்களைப் பெற்றுக் கொள்வதில் இந்நிறுவனம் வெற்றிகண்டுள்ளது. இவ்வளவாளர் குழாமில் பல்கலைக்கழக மற்றும் வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த சமகால மற்றும் முன்னர் இருந்த கல்விமான்கள், கொள்கை வகுப்பாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள், பகுதி அரச நிறுவனங்களின் செயற்பாட்டாளர்கள் உட்பட அரச நிறுவனங்களைச் சார்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சாலை நிபுணர்கள் உள்ளடக்கப்படுகின்றனர்.

## 2.6 2017 ஆம் ஆண்டின் நடப்பு விபரங்கள்

செயற்றிட்டத்திற்கமைய, 52 ஒருநாள் நிகழ்ச்சிகளையும், 40 இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும், 12 மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்கு தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம் திட்டமிட்டிருந்தது. எனினும் 51 ஒரு நாள் நிகழ்ச்சிகளையும், 40 இரண்டு நாள் நிகழ்ச்சிகளையும், 10 மூன்று நாள் நிகழ்ச்சிகளையும் நடாத்தியதன் மூலம் குறித்த இலக்கை விட அதிகளவான நிகழ்ச்சிகளை நடாத்தி வெற்றிகாண முடிந்தது. அவ்வாறே சேவைபெறுநர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக தயாரிக்கப்பட்ட 23 பாடநெறிகளும், சான்றிதழ் பாடநெறிகள் 08, 18 அரச பரீட்சைகளும், நடாத்தப்பட்டன. அவ்வாறே 06 டிப்ளோமாப் பாடநெறிகளை நடாத்துவதற்கு இலக்கு வைக்கப்பட்டிருந்தாலும் இவ்வருடத்தில் 05 டிப்ளோமாப் பாடநெறிகளை நடாத்தி நிறுவனம் வெற்றி கண்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் நிறுவனத்தின் நிதி இலக்கு ரூ.24.3ஆகக் காணப்பட்டதுடன், தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனம் 31.4 மில்லியன் ரூபாய்களை உழைத்துக் கொள்ள முடிந்தமைக்கான காரணம் டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள், பரீட்சைகள், செயலமர்வுகள் மற்றும் கருத்திட்டங்கள் உள்ளடங்களாக 163 நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்ததன் வழியாக அத்தகைய வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடிந்தது. அட்டவணை – 1 பௌதீக மற்றும் நிதி மீளாய்வு 2017, வரைபடம் - 1, வரைபடம் - 2, ஊடாக இவ்வாண்டின் முன்னேற்றம் தொடர்பான தரவுகள் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன.


**அட்டவணை 1**

**பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் - 2017**

| நிகழ்ச்சிகள் | பௌதீக | | நிதி (ரூ.'000) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 52 | 51 | 3,120 | 3,718 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 40 | 40 | 4,800 | 5,176 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 12 | 10 | 1,920 | 1,449 |
| சான்றிதழ் பாடநெறிகள் | 12 | 8 | 2,340 | 2,575 |
| பரீட்சைகள் | 5 | 18 | 200 | 1,675 |
| டிப்ளோமாப் பாடநெறிகள் | 6 | 5 | 7,155 | 7,263 |
| வெளியார் கோரிக்கைகளின் அடிப்படையிலான பாடநெறிகள் | 12 | 23 | 3,840 | 4,209 |
| சேயலமர்வுகள் | 4 | 8 | 1,020 | 5,344 |
| **மொத்தம்** | **143** | **163** | **24,395** | **31,409** |


வரைபு - 1

பௌதீக மீளாய்வு 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம்




வரைபு - 2

நிதி மீளாய்வு - 2017 – இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ..'000)






## 2.7 தொழிற்சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள்


தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவின் நிதிசார் இலக்கு ரூ.6.0 மில்லயனாகக் காணப்பட்டதுடன் அவை ஒருநாள், இரண்டு நாள், மூன்று நாள் திட்டங்கள், வெளியார் கோரிக்கைகளுக்கமைவான நிகழ்ச்சிகள், டிப்ளோமாப் பாடநெறிகள், சான்றிதழ் பாடநெறிகள் போன்ற 33 நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பெற்றுக் கொள்வதற்குத் இலக்கு வைக்கப்பட்டது. ஏவ்வாறாயினும் ரூ.5.5 மில்லியன்கள் இத்தகைய 18 நிகழ்ச்சிகளை நடாத்தியதன் ஊடாக ஈட்டிக் கொள்ளப்பட்டது. முன்னேற்றம் தொடர்பான தரவுகள் அட்டவணை – 2, வரைபு – 3, வரைபு – 4 என்பவற்றில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**
**பௌதீக மற்றும் நிதி மீளாய்வு – 2017**
**தொழிற் சட்டங்கள் மற்றும் கைத்தொழில் உறவுகள் பிரிவு**

| **நிகழ்ச்சித்திட்டங்கள்** | **பௌதீக** | | **நிதி (ரூ.'000)** | |
|---|---|---|---|---|
| | **இலக்கு** | **முன்னேற்றம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 12 | 4 | 720 | 150 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 10 | 5 | 1,200 | 558 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 4 | 4 | 640 | 744 |
| வேளியார் கோரிக்கைகளின் மீதான நிகழ்ச்சிகள் | 2 | 2 | 640 | 224 |
| டீப்ளோமாப் பாடநெறிகள் | 2 | 2 | 2,310 | 3,388 |
| சான்றிதழ் பாடநெறிகள் | 3 | 1 | 585 | 481 |
| **மொத்தம்** | **33** | **18** | **6, 095** | **5,545** |


## வரைபு - 3

**பௌதீக முன்னேற்றம் 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம்**
**தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு**




## வரைபு - 4

**நிதி மீளாய்வு 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ.'000)**
**தொழிற் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள் பிரிவு**




## 2.8 மனித வள முகாமைத்துவம்

மனித வள முகாமைத்துவப் பிரிவின் அவ்வருடத்திற்கான இலக்கு ரூ.8.2 மில்லியன் எனத் திட்டமிடப்பட்டிருந்தது. அது 48 குறுகிய காலப் பாடநெறிகள் மற்றும் 2 டிப்ளோமாப் பாடநெறிகள் ஊடாக ஈட்டிக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மனித வள முகாமைத்துவப் பிரிவினால் மிகச் சிறந்த வகையில் முயற்சித்ததன் காரணமாக 2 டிப்ளோமாப் பாடநெறிகள் மற்றும் 54 குறுகிய காலப் பாடநெறி ஊடாக ரூ.6.8 மில்லியன் ரூபாய்களை ஈட்டிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. அட்டவணை – 3, பௌதீக மற்றும் நிதி மீளாய்வு 2017, வரைபு – 5, வரைபு – 6 ஊடாக இவ்வருட முன்னேற்றத்தை தெளிவாக அறிந்து கொள்ளலாம்.


**அட்டவணை 3**
**பௌதீக மற்றும் நிதி மீளாய்வு - 2017**
**மனித வள முகாமைத்துவம்**

| நிகழ்ச்சித்திட்டங்கள் | பௌதீக | | நிதி (ரூ.000’) | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | | இலக்கு |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 20 | 23 | 1,200 | 1,335 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 15 | 11 | 1,800 | 776 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 5 | 3 | 800 | 312 |
| வெளியார் கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சிகள் | 5 | 14 | 1,600 | 750 |
| டிப்ளோமாப் பாடநெறிகள் | 2 | 2 | 2,310 | 3,018 |
| சான்றிதழ் பாடநெறிகள் | 3 | 3 | 585 | 703 |
| **மொத்தம்** | **50** | **56** | **8,295** | **6,894** |

வரைபு: 5
பௌதீக மீளாய்வு 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம்
மனித வள முகாமைத்துவம்




வரைபு : 6
நிதி மீளாய்வு 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ.'000)
மனித வள முகாமைத்துவம்



## 2.9 வேலைத்தளத்தின் வினைத்திறன்

வேலைத்தளத்தின் விளைதிறனை விருத்தி செய்யும் பிரிவின் நிதிசார் இலக்காக, குறுகிய காலப் பாடநெறிகள் 46 மற்றும் 01 டிப்ளோமாப் பாடநெறியை நடாத்துவதன் ஊடாக ரூ.6.8 மில்லியன் ரூபாவை ஈட்டுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இப்பிரிவானது குறுகிய கால பாடநெறிகள் 61 மற்றும் 1 டிப்ளோமாப் பாடநெறியை நடாத்தியதன் ஊடாக 9.6 மில்லியன் ரூபாய்களை இவ்வருடத்தில் ஈட்டிக் கொள்ள முடிந்தது. முன்னேற்றம் தொடர்பான அட்டவணை – 4, வரைபு – 7, வரைபு – 8, ஊடாகத் தெளிவாகக் காணலாம்.


**அட்டவணை 4**
**பௌதீக மற்றும் நிதி மீளாய்வு – 2017**
**வேலைத்தளத்தின் வினைத்திறன்**

| **நிகழ்ச்சித்திட்டம்** | **பௌதீக** | | **நிதி (ரூ.000')** | |
|---|---|---|---|---|
| | **இலக்கு** | **முன்னேற்றம்** | | **இலக்கு** |
| ஒருநாள் நிகழ்ச்சிகள் | 20 | 24 | 1200 | 2232 |
| இரண்டு நாள் நிகழ்ச்சிகள் | 15 | 24 | 1800 | 3842 |
| மூன்று நாள் நிகழ்ச்சிகள் | 3 | 3 | 480 | 393 |
| சான்றிதழ் பாடநெறிகள் | 3 | 3 | 585 | 962 |
| டிப்ளோமா பாடநெறிகள் | 1 | 1 | 1155 | 847 |
| வேளியார் கோரிக்கைகளுக்கமைவான பாடநெறிகள் | 5 | 7 | 1600 | 1386 |
| **மொத்தம்** | **47** | **62** | **6,820** | **9,662** |

வரைபு - 7

பௌதீக மீளாய்வு 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம்


வேலைத்தளத்தின் வினைத்திறன்




வரைப் - 8

நிதி மீளாய்வு 2017 - இலக்கு மற்றும் முன்னேற்றம் (ரூ.'000)

வேலைத்தளத்தின் வினைத்திறன்



## 3.0 நிதிக் கூற்று

### 3.1 2017 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

| | Note | 2017 | 2016 |
|---|---|---|---|
| | | Rs. | Rs. |
| **Assets** | | | |
| **Non Current Assets** | | | |
| Plant and Equipment | 14 | 11,824,902.00 | 10,326,283.91 |
| **Current Assets** | | | |
| Inventories | 15 | 545,959.42 | 428,843.79 |
| Receivables | 16 | 12,822,429.17 | 8,582,078.96 |
| Cash Advances | 18 | 2,002,500.00 | 121,966.00 |
| Fixed Deposit (BOC) | | 22,071,383.37 | 10,393,205.48 |
| Cash & Cash Equivalent | 19 | 6,728,660.08 | 16,179,257.21 |
| **Total Assets** | | **55,995,834.04** | **46,031,635.35** |
| **Liabilities** | | | |
| **Current Liabilities** | | | |
| Accrued Expenses | 20 | 1,908,150.62 | 1,482,319.64 |
| Received in advance | 17 | 434,850.52 | 531,243.75 |
| **Total Net Assets** | | **53,652,832.90** | **44,018,071.96** |
| **Net Assets/ Equity** | | | |
| Accumulated Fund | | | |
| Balance B/F as at 01.01.2017 | | 44,018,071.96 | 40,049,284.44 |
| Adjustments in respect of the previous years | 21 | (759,325.29) | (1,524,600.00) |
| Adjusted Balance as at 01.01.2017 | | 43,258,746.67 | 38,524,684.44 |
| Capital Reimbursment | 22 | 3,000,000.00 | 2,481,015.30 |
| Adjustment for the Period | 23 | 2,244,785.10 | 2,683,186.61 |
| Excess/(Deficit) for the Year | | 5,149,301.13 | 329,185.61 |
| | | **53,652,832.90** | **44,018,071.96** |

The accounting policies on pages 07 to 09 and notes on pages 10 to 30 from an integral part of this financial statement. The Board of Directors are responsible for the prepration and presentation of these Financial Statements in accordance with the Sri lanka Public Sector Acounting Standards (SLPSAs). These Financial Statements were approved by the Board of Directors and signed on their behalf.

Lankika Weerasinghe
Accountant

Lankika Weerasinghe
Accountant
National Institute of Labour Studies
No. 267, Pannipitiya Road,
Pelawatte, Battaramulla.

T M J W Tennakoon
Director General

T.M.J.W. Tennakoon
Director General
National Institute of Labour Studies
No. 267, Pannipitiya Road,
Pelawatta, Battaramulla.

Samanthi Senanayake
Board Member

Samanthi Senanayake
Senior Assistant Secretary (Information Technology)
Ministry of Public Administration & Management
Independence Square - Colombo 07.

S A Nimal Saranatissa
Chairman

S. A. Nimal Saranatissa
Secretary
Ministry of Labour, Trade Union Relations and Sabaragamuwa Development
Labour Secretariat,
Narahenpita, Colombo 05

**3.2 2017 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாடு தொடர்பான கூற்று**

| | குறிப்பு | 2017 ரூ. | 2016 ரூ. |
|---|---|---|---|
| **<u>வழிநடத்தல் வருமானம்</u>** | | | |
| மீண்டெழுபவற்றை மீளச் செலுத்துதல் | 4 | 11,326,103.20 | 8,839,191.20 |
| வருமானம் | 5 | 3,2910,137.28 | 23,025,998.92 |
| **முழு வருமானம்** | | **44,236,240.51** | **31,865,190.12** |
| **<u>வழிநடத்தல் செலவு</u>** | | | |
| ஆளனி சம்பளம் | 6 | 12,369,825.25 | 10,581,829.58 |
| போக்குவரத்து | 7 | 751,341.56 | 826,368.20 |
| பயன்படுத்தப்பட்ட வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 8 | 1,658,520.36 | 944,440.22 |
| பராமரிப்பு | 9 | 1,995,819.44 | 1,189,802.87 |
| ஒப்பந்தச் சேவைகள் | 10 | 8,945,746.79 | 7,886,033.50 |
| தேய்மானம் / கடன் தீர்ப்பு | 11 | 1,564,086.85 | 1,477,524.03 |
| ஏனைய வழிநடத்தற் செலவுகள் | 12 | 1,808,326.28 | 1,027,122.96 |
| நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் | 13 | 9,993,272.85 | 7,602,883.15 |
| முழு வழிநடத்தற் செலவுகள் | | **39,086,939.38** | **31,536,004.51** |
| **வழிநடத்தற் செயற்பாடுகளின் மிகை / குறை** | | **5,149,301.13** | **329,185.61** |
| **<u>நிதிச் செலவுகள்</u>** | | | |
| வங்கிக் கட்டணங்கள் | | - | - |
| **வழிநடத்தற் செயற்பாடுகளின் அண்ணளவான மிகை / குறை** | | **5,149,301.13** | **329,185.61** |

### 3.3 2017 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிப்பாச்சல் கூற்று

| | குறிப்பு | 2017 ரூ. | 2016 ரூ. |
|---|---|---|---|
| **வழிநடத்தற் செயற்பாடுகளின் நிதி ஓட்டம்** | | | |
| வழிநடத்தற் செயற்பாடுகளின் மிகை / குறை | | 5,149,301.13 | 329,185.61 |
| **இணக்கம்:** | | | |
| சம்பளம், அமைச்சு மற்றும் திணைக்களம் | 23.1 | 1,563,007.04 | 2,683,186.61 |
| வழிநடத்தற் செயற்பாடுகள் | 24 | (77,547.23) | (524,600.00) |
| தேய்வைக் கணக்கிடுதல் | 11 | 1,564,086.85 | 1,477,524.03 |
| தொடர்ச்சியான மூலதன கட்டணங்களுக்கு முன்னர் வழிநடத்தற் பயன்கள் | | **8,198,847.79** | **3,965,296.25** |
| இருப்பில் அதிகரிப்பு / குறைவு | 15 | (117,115.63) | (265,378.42) |
| பெறுவனவுகளின் அதிகரிப்பு /குறைவு | 16 | (4,240,350.21) | (4,536,318.01) |
| ஆமைச்சு கணக்கில் அதிகரிப்பு / குறைவு | | | 89,500.00 |
| காசு முற்பணங்களது அதிகரிப்பு / குறைவு | | (1,880,534.00) | (121,966.00) |
| குவிப்புகளின் அதிகரிப்பு / குறைவு | 20 | 425,830.98 | 1,263,760.50 |
| முற்பணங்களில் கிடைத்த வருமான அதிகரிப்பு / குறைவு | 17 | (96,393.23) | 522,243.75 |
| **வழிநடத்தல்கள் மூலம் ஈட்டப்பட்ட நிதி** | | **2,290,285.70** | **917,138.07** |
| நிதிச் செலவுகள் | | - | - |
| வழிநடத்தற் செயற்பாடுகளின் அண்ணளவான நிதிப்பாச்சல் | | **2,290,285.70** | **917,138.07** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் நிதிப்பாச்சல்** | | | |
| பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களை பெற்றுக் கொள்ளுதல் | 14.1 | (3,062,704.94) | (2,276,439.62) |
| முதலீட்டு மீளச் செலுத்தல்கள் | 22 | 3,000,000.00 | 2,481,015.30 |
| நிலையான வைப்புக்கள் | | 11,678,177.89 | 10,393,205.48 |
| **முதலீட்டு செயற்பாடுகளின் அண்ணளவான நிதியோட்டம்** | | **(11,740,882.83)** | **(10,188,629.80)** |
| நிதி மற்றும் அதற்குச் சமமானவைகளின் அண்ணளவான அதிகரிப்பு / குறைவு | | (9,450,597.13) | (9,271,491.73) |
| வருடத் தொடக்கத்தில் நிதி மற்றும் அதற்குச் சமமானவைகள் | 19 | 16,179,257.21 | 25,450,748.9419 |
| வருட இறுதியில் நிதி மற்றும் அதற்குச் சமமானவைகள் | 19 | **6,728,660.08** | **16,179,257.21** |

**3.4 பகுதிகளது வேறுபாடுகள் தொடர்பான கூற்று – 2017 டிசம்பர் 31ஆந் திகதியில்**

| | **2017 ரூ.** |
|---|---|
| **2017.01.01 ஆந் திகதியில் மு/கொ மொத்த நிதி மீதி** | **44,018,071.96** |
| கடந்த வருடம் தொடர்பிலான இணக்கம் | (759,325.29) |
| **2017.01.01 ஆந் திகதியில் இணக்கம் செய்யப்பட்ட மீதி** | **43,258,746.67** |
| மூலதன மீளச் செலுத்தல்கள் | 3,000,000.00 |
| காலப்பகுதிக்கான இணக்கம் | 2,244,785.10 |
| வருடத்திற்கான மிகை / குறை | 5,149,301.13 |
| **2017.12.31 ஆந் திகதியில் மீதி** | **53,652,832.90** |

## 3.5 2017 டிசம்பர் மாதத்தில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றிற்கான குறிப்பு

### 1. நிறுவனத்தின் தகவல்கள்

### 1.1 பொதுவானவை

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனமானது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் உள்ள ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப பிரிவினை மறுசீரமைத்து தொழில் விடயப் பரப்பிற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இந்நிறுவனம் தாபிக்கப்பட்டது. பராளுமன்றத்தினால் 2012ஆம் ஆண்டு 12ஆம் இலக்க சட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் ஊடாக அது சட்டரீதியாகத் தாபிக்கப்பட்டது. கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் தொழில் தருனர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஊழியர்கள் உட்பட தொழிற்றுறையில் முத்தரப்பு பங்களார் பிரதிநிதிகளைக் கொண்டமைந்த ஆளுகைச் சபையினால் இந்நிறுவனம் நிருவகிக்கப்படுகின்றது. இந்நிறுவனம் இலக்கம், 267, பன்னிபிட்டிய வீதி, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 அடிப்படைச் செயற்பாடுகள் மற்றும் வழிநடத்தல் இயல்புகள்

நிறுவனத்தின் அடிப்படைச் செயற்பாடென்பது, பயிற்சித் திட்டங்கள், தொழில் சட்டங்கள் மற்றும் தொழில் உறவுகள், வேலைத்தளத்தின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல், வெளியீடுகளை மேற்கொள்ளுதல் என்பனவாகும்.

### 1.3 நிறுவனத்தின் ஆளணியினர்

2007 செப்டெம்பர் தொடக்கம் நிறுவனத்தினால் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டாலும், தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் ஆளணி எண்ணிக்கைக்கான அனுமதியானது, 2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே பெறப்பட்டது. அத்தகையதொரு நிலைமையின் கீழ், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் மற்றும் தொழில் திணைக்களத்தினால் நிறுவனத்திற்கு ஆளினியினர் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களது சம்பளம் உரிய அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது. அதனால் இந்நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளணி வேதனாதிகள் மற்றும் படிகள் தேசிய தொழிற்சங்க நிறுவனத்தைப் போன்றே தொழில் மற்றும் தொழிற்சங்க அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தினால் கொடுப்பனவு செய்யப்படுகின்றன.

### 1.4 தேசிய தொழிற் கற்கைகள் நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம்

நிறுவனத் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் 2011 செப்டெம்பர் 30ஆந் திகதி வரை நிறுவனத்தின் நிதி முகாமைத்துவமானது தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. (ஆளணியினர் மற்றும் வேறு தடைகள் காரணமாக)

## 2. ஆயத்தப்படுத்தும் அடிப்படைகள்

### 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள், நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கைகள், நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்றுக்கள், நிதி ஓட்ட அறிக்கை, பங்குகளது வேறுபாட்டு அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களைக் கொண்டுள்ளது. இலங்கை பட்டயக் கணக்காளர்களது நிறுவனத்தினால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை அரச துறையின் கணக்கியல் நியமங்களுக்கமைய இக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீடுகளின் அடிப்படைகள்

நிதிக் கூற்றுக்கள் உண்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்களது பணவீக்க விடயங்களின் பொருட்டு இணக்கம் செய்யப்படவில்லை.

### 2.3 நிகழ்காலக் கவனம்

இதனைக் கொண்டு செல்வதற்குள்ள இயலுமை, தாபிக்கும் மதிப்பீடு என்பன பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவர்களால் கலைத்து விடுவதற்கு அல்லது வர்த்தக நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு கவனம் செலுத்தப்படவில்லை.

### 2.4 ஒப்பீட்டளவிலான தகவல்கள்

நிறுவனத்தினால் கணக்கீட்டு கொள்கைகள் தொடர்ச்சியாக பேணப்பட்டு வந்துள்ளதுடன், அதனால் கடந்த வருடத்தில் பயன்படுத்தியவையுடன் அவை இணங்கவில்லை. நடப்பு வருடத்தில் சமர்ப்பித்தலை உறுதிப்படுத்துவதற்காக தேவையான சந்தர்ப்பத்தில் கடந்த வருடத்தின் தரவுகள் மற்றும் தகவல்கள், கூற்றுக்கள் என்பன மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.5 செயற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தலின் பண அலகுகள்

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பண அலகான இலங்கை ரூபாக்களில் இந்த நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 3. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள், இந்நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகள் இக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து காலப் பகுதியிலும் தொடர்ச்சியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### 3.1 சொத்துக்கள், பொறிமுறைகள், உபகரணங்கள்

சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரண செலவு என்பது சொத்துக்கள் அதன் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டிற்கு அதன் வேலைசெய்யும் நிலைமைக்கு கொண்டு வரும்போது ஏற்பட்ட சிற்சில செலவுகளுடன் வருகின்ற கொள்வனவு செய்யும் அல்லது நிருமாணிக்கும் செலவாகும். செலவின் போது ஒரு சொத்தாக முதலில் அறிந்து

கொண்டதன் பின்னர், மீண்டும் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அதன் மூலம் ஏற்படுகின்ற ஏதேனும் தேய்வினை கழித்ததன் பின்னர் மீண்டும் மதிப்பிடப்பட்ட தொகை கொண்டு செல்லப்படும். ஏனைய அனைத்துச் சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களது தேறிய தேய்வு கழிக்கப்பட்டு செலவுகள் குறிப்பிட்டுக் காட்டப்படும். வெவ்வேறு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படக் கூடிய ஆயட்காலத்தைக் கொண்ட பிரதான உதிரிப் பாகங்களில் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் உள்ளடக்கப்படும் சந்தர்ப்பத்தில், அச்சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் என்பன பிறிதான விடயமாகக் கணக்கிடப்படும். அனைத்து நிதியாண்டின் இறுதியிலும் தேவையான விதத்தில் சொத்துக்களது எஞ்சிய மதிப்பு, பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்வு கணக்கிடும் முறையை விசாரித்து தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்திற்கு மேலதிகமாக செலவினை வெட்டி விடுவதற்காக உறுதியுடைய காணிகளை விட அனைத்து சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் மீது தேய்வு அறவிடப்படும். வெளியே அனுப்பக் கூடிய திகதி வரை பயன்பாட்டிற்கான சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய திகதிகள், தேய்வுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் SLPSAS 7 இன் சொத்து பொறிமுறை மற்றும் உபகரணங்களது விபரிக்கப்பட்டுள்ள விதத்தில் பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் செலவு முறையில் கணக்கிடப்பட்டுள்ளது என கீழே காட்டப்பட்டுள்ள விதத்தில் இலகுவான இணைந்த முறையின் மீது பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களது தேய்வு கணக்கிடப்படுகின்றது.

**பயன்படுத்தப்பட்ட அடிப்படை வருடாந்த சதவீதங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| | **2017** |
|---|---|
| பொறிமுறைகளும் உபகரணங்களும் | **10** வருடங்கள் |
| மரத் தளபாடங்கள் மற்றும் அதன் உபகரணங்கள் வருடங்கள் | **13(7.5%)** |
| கணனி | **10** வருடங்கள் |
| வாகனங்கள் | **10** வருடங்கள் |
| பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | **3** வருடங்கள் |
| புத்தகங்கள் | **5** வருடங்கள் |

மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் 2013.10.02ஆந் திகதியில் சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் என்பன மீள மதிப்பீடு செய்யப்பட்டு 2014.01.07ஆந் திகதி உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டிற்கான தேய்வுகளை கணக்கிடுதல் 2014.01.01ஆந் திகதி மீள் மதிப்பீட்டை கணக்கிடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருடத்தில் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யும் செலவின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. தேய்வின் சதவீதத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுவதாக சமிக்ஞை தென்படின், சொத்துக்களது எஞ்சிய பெறுமதியின் பயன்பாட்டு ஆயுட் காலம்,

அச்சொத்துக்கள் தேய்வடையும் புதிய எதிர்பார்ப்புக்களை பிரதிபலிப்பதற்காக மறுசீரமைக்கப்படுகின்றது. முதலில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாட்டு நியமங்களில் எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால பொருளாதார நன்மைகளை பேணிச் செல்லுதல் அல்லது மீளவும் பெற்றுக் கொள்வதற்கு சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்களைப் பேணிச் செல்லுதல், முன்னர் பராமரித்துச் செல்லுதல் தொடர்பாக ஏற்பட்ட செலவுகள், மேற்கொள்ளப்பட்ட செலவாக அடையாளங் காணப்படும்.

.

## 3.2 இருப்பு

நிதியாண்டில் பயன்படுத்தப்பட்ட இருப்புக்களது செலவின் போது வருமானம் மற்றும் செலவு கூற்றுக்களுக்காக அறவிடப்பட்டிருந்தது.

## 3.3 பணம் மற்றும் அதற்குச் சமமான பெறுமதிகள்

பணம் மற்றும் பணத்திற்குச் சமமானவைகள் என்பன கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளில் வைப்பிடப்பட்ட பணம் என்பனவற்றை உள்ளடக்கும்.

## 3.4 பொறுப்புக்களும் ஒதுக்குகளும்

கடந்தகால சம்பவங்களது விளைவாக நடப்பு வருடத்தில் பொறுப்புக்கள் காணப்பட்டால் ஐந்தொகையில் பொறுப்புக்கள் அறிந்து கொள்ளப்படும். பொருளாதார நன்மைகளைக் கருத்திற் கொண்டு வளங்கள் வெளியே செல்லுவது அதனைத் தீர்க்கும் சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. *கடன்கொடுத்தோரது கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொறுப்புக்கள் ஐந்தொகையின் தற்போதைய பொறுப்புக்களாக கருத்திற் கொள்ளப்படும்.* கடந்த காலங்களது சம்பவங்களது விளைவாக நம்பகத் தன்மையுடன் மதிப்பிடக்கூடிய நடப்பு சட்டரீதியான அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொறுப்பு தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்திற்குக் காணப்பட்டால் ஒதுக்குகள் இனங்காணப்படுவதுடன் பொறுப்புக்களைத் தீர்த்துக் கொள்வதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே வழிந்தோடுதல் அவசியம் என்பதை எண்ணிக் கொள்ளலாம்.

## 3.5 வருமானங்களை அடையாளங் காணுதல்

பொருட்கள் வழங்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பொருட்கள் / சேவைகளது விற்பனையின் போது வருமானம் அடையாளங் காணப்படும். கவனத்திற் கொள்ளப்பட்ட பெறுவனவுகள் மற்றும் பெறக்கூடிய நியாயமான பெறுமதி, இலங்கை அரசாங்கத்திற்காக சேகரிக்கப்பட்ட வரியுடன் தொடர்புடைய கழிப்பனவுகள் மற்றும் விற்பனைகள் அண்ணளவான மதிப்பீட்டில் வருமானம் காட்டப்படுகின்றது.

### 3.5.1 வருமான அடிப்படை

பங்குபற்றுபவர்கள் கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது குவிப்பு அடிப்படையில் வருமானம் கணக்கிடப்படும். தவிர்க்க முடியாத காரணங்களினால் சில பங்குபற்றுபவர்களால் நிறைவு செய்யப்படுவதற்கு முன்னர் பாடநெறிகள் விட்டுச் செல்லப்படுவதுடன் பல்வேறு காரணங்களினால் சில பாடநெறிக் கட்டணங்களை அறவிட முடியாதுள்ளது. இப்பெறுவனவுகள் வருமானமாக கவனத்திற் கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், இயலுமெனின் மீதித் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பாடநெறியின் ஒட்டுமொத்த வருமானமானது பாடநெறியின் வருடத்திற்கே தீர்மானிக்கப்படுகின்றது.

3.6 **பெறுவனவுகள்**

தீமையான மற்றும் சந்தேகத்திற்குரிய பெறுவனவிற்கான அண்ணளவான படிகளை விளங்கிக் கொள்வதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது என விற்பனைப் பெறுமதிக அளவுகளில் குறிக்கப்பட்டுள்ளது. உரிய தரப்பினரது வேறு பெறுவனவுகள் மற்றும் அறவிடல்கள் தீமையான மற்றும் சந்தேகத்திற்கிடமான பெறுவனவுகளுக்கான படிகள் செலவிலிருந்து கழிக்கப்படும்.

**3.7 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்பு தொகை திட்டம்**

வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்பு தொகை திட்டம் என்பது பிறிதொரு பகுதிக்கு நிலையான பங்களிப்புத் தொகை செலுத்தும் பகுதியின் கீழ் உள்ள தொழிலுக்குப் பின்னரான பயன் திட்டமென்பதுடன் அதிகளவான தொகையை கொடுப்பனவு செய்வதற்காக சட்டரீதியான அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக்கள் இல்லை. அனைத்து ஊழியர்களும் உள்ளடக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்புச் செய்வதற்கான பொறுப்புக்கள் மீது ஏற்பட்ட நட்டம் அல்லது இலாபம் செலவாக அடையாளங் காணப்படும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என ஊழியர்களது அண்ணளவான வேதனாதிகளில் 12% மற்றும் 3% நிறுவனம் பங்களிப்புத் தொகையை செலுத்தும்.

3.8 **நிதிப்பாச்சல் கூற்று**

நேரில் முறையைப் பயன்படுத்தி நிதிப்பாச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று குறிப்பு**

| குறிப்பு : 4 | **2017** | **2016** |
|---|---|---|
| **<u>மீண்டெழும் செலவுகளை மீளச் செலுத்துதல்</u>** | ரூ. | ரூ. |
| மீண்டெழும் செலவுகளை மீளச் செலுத்துதல் | 11,326,103.23 | 8,839,191.20 |
| **மொத்தம்** | **11,326,103.23** | **8,839,191.20** |

| குறிப்பு : 5 | **2017** | **2016** |
|---|---|---|
| **<u>வருமானம்</u>** | ரூ. | ரூ. |
| டிப்ளோமாப் பாடநெறி | 7,263,000.00 | 6,236,250.00 |
| சான்றிதழ் பாடநெறி | 2,575,000.00 | 1,574,000.00 |
| ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 3,718,050.00 | 3,453,200.00 |
| இரண்டு நாள் நிகழச்சித்திட்டங்கள் | 5,176,700.00 | 3,039,000.00 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 1,449,000.00 | 1,932,800.00 |
| விசேட நிகழச்சித்திட்டங்கள் | 4,209,088.00 | 1,875,000.00 |
| பரீட்சை வருமானம் | 1,675,490.00 | 208,360.00 |
| ILO கருத்திட்டம் | - | 1,901,243.75 |
| செயலமர்வுகள் | 5,344,625.00 | 583,525.00 |
| வேறு வருமானங்கள் | 1,499,184.28 | 2,222,620.17 |
| **மொத்தம்** | **32,910,137.28** | **23,025,998.92** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**

**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு**

| **குறிப்பு : 6** | **2017** | **2016** |
|---|---|---|
| **ஆளனி வேதனாதிகள்** | ரூ. | ரூ. |
| ஆளனியினருக்கான சம்பளம் | 4,039,618.17 | 1,962,686.46 |
| அமைச்சு ஆளனியினருக்கான சம்பளம் | 1,563,007.04 | 1,802,896.47 |
| திணைக்கள ஆளனியினருக்கான சம்பளம் | - | 880,290.14 |
| இணைப்பு சம்பளம் | 2,402,843.24 | 2,530,275.74 |
| இணைப்பு படிகள் | 345,273.50 | 460,584.86 |
| ஓய்வூதிய பங்களிப்பு நிதி | 331,166.65 | 355,404.50 |
| முகாமைத்துவச் செலவுகள் | 412,500.00 | 450,000.00 |
| பதிற்கடமை படிகள் | 204,746.03 | 116,014.36 |
| சம்பளம் | 648,975.00 | 717,475.00 |
| பணிப்பாளர் நாயகத்தின் எரிபொருள் | - | - |
| EPF பங்களிப்பு நிதி | 874,235.38 | 427,183.08 |
| ETF பங்களிப்பு நிதி | 131,136.14 | 63,277.44 |
| விடுமுறை நாள் சம்பளம் | 122,947.15 | 119,235.90 |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 396,946.81 | 178,145.14 |
| வேறு படிகள் | 422,894.64 | 29,282.81 |
| ஆளுகை சபை செலவுகள் | 218,854.00 | 320,689.68 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செலவுகள் | 95,981.50 | 115,108.00 |
| பொதுவான கணக்காய்வுக் கட்டணம் | 158,700.00 | 53,280.00 |
| **மொத்தம்** | **12,369,825.25** | **10,581,829.58** |

| **குறிப்பு : 7** | **2017** | **2016** |
|---|---|---|
| **போக்குவரத்துச் செலவுகள்** | ரூ. | ரூ. |
| உள்நாடு | 65,563.50 | 38,609.30 |
| வெளிநாடு | 685,778.06 | 787,758.90 |
| மொத்தம் | **751,341.56** | **826,368.20** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| குறிப்பு : 8 | **2017** | **2016** |
|---|---|---|
| **வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்** | ரூ. | ரூ. |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 1,371,584.38 | 798,748.22 |
| பத்திரிகை | 19,120.00 | 22,070.00 |
| எரிபொருள் | 259,815.98 | 123,622.00 |
| உணவு மற்றும் சீருடை | 8,000.00 | |
| **மொத்தம்** | **1,658,520.36** | **944,440.22** |

| குறிப்பு : 9 | **2017** | **2016** |
|---|---|---|
| **பராமரிப்பு** | ரூ. | ரூ. |
| காற்றுச்சீராக்கி இயந்திர திருத்தம் | 105,674.40 | 84,836.41 |
| கணனி பராமரிப்பு | 126,005.00 | 33,130.50 |
| அலுவலகப் பராமரிப்பு | 1,305,510.51 | 806,207.48 |
| வாகனப் பராமரிப்பு | 458,629.53 | 265,628.48 |
| **மொத்தம்** | **1,995,819.44** | **1,189,802.87** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு**

| குறிப்பு : 10 | 2017 | 2016 |
|---|---|---|
| **ஒப்பந்தச் சேவைகள்** | ரூ. | ரூ. |
| கட்டிட குத்தகை | 4,550,000.00 | 4,200,000.00 |
| தொலைபேசி | 399,812.32 | 331,566.79 |
| சுத்திகரிப்புச் செலவுகள் | 1,493,996.80 | 1,393,366.12 |
| மின்சாரம் | 813,027.58 | 764,407.38 |
| நீர் | 58,677.69 | 72,662.92 |
| தபால் கட்டணம் | 320,225.00 | 242,100.00 |
| சேவை ஒப்பந்தங்கள் | 190,931.29 | 274,986.92 |
| பாதுகாப்பு கட்டணங்கள் | 983,877.18 | 566,614.60 |
| நிறுத்தி வைக்கப்பட்ட வரி | 135,198.93 | 40,328.77 |
| **மொத்தம்** | **8,945,746.79** | **7,886,033.50** |

| குறிப்பு : 11 | 2017 | 2016 |
|---|---|---|
| **தேய்வு** | ரூ. | ரூ. |
| இயந்திரங்களும் பொறிமுறைகளும் | 574,851.13 | 525,156.38 |
| மரத்தளபாடங்களும் உபகரணங்களும் | 353,280.36 | 340,612.29 |
| கணனி | 590,600.00 | 355,600.00 |
| பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | 30,010.00 | 240,810.00 |
| புத்தகங்கள் | 15,345.36 | 15,345.36 |
| **மொத்தம்** | **1,564,086.85** | **1,477,524.03** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு**

| குறிப்பு : 12 | 2017 | 2016 |
|---|---|---|
| **வேறு வழிநடத்தற் செலவுகள்** | ரூ. | ரூ. |
| விற்பனை அறிவித்தல்கள் மற்றும் மேம்படுத்தல்கள் | 1,480,510.57 | 904,630.96 |
| அலுவலக நலனோம்பல் | 119,661.00 | 119,492.00 |
| போக்குவரத்து செலவுகள் | 161,000.00 | 3,000.00 |
| வேறு செலவுகள் | 47,154.71 | |
| **மொத்தம்** | **1,808,326.28** | **1,027,122.96** |

| குறிப்பு: 13 | 2017 | 2016 |
|---|---|---|
| **நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள்** | ரூ. | ரூ. |
| விரிவுரைக் கட்டணங்கள் | 3,236,887.50 | 2,287,076.40 |
| உணவு பானங்கள் | 2,630,954.75 | 2,080,765.25 |
| பரீட்சை செலவுகள் | 1,093,425.50 | 485,350.00 |
| பயிற்சியும் அபிவிருத்தியும் | - | 1,019,956.05 |
| பரிசளிப்பு விழா | - | 327,145.45 |
| கருத்திட்ட செலவுகள் | 3,032,005.10 | 1,402,590.00 |
| **மொத்தம்** | **9,993,272.85** | **7,602,883.15** |

| குறிப்பு : 14 | 2017 | 2016 |
|---|---|---|
| **பொறிமுறைகளும் உபகரணங்களும்** (14.1) | ரூ. | ரூ. |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 3,910,721.13 | 3,988,624.82 |
| மரத்தளபாடங்களும் அதன் பாகங்களும் | 3,475,038.74 | 3,659,411.60 |
| கணனி | 4,374,040.00 | 2,614,640.00 |
| பெயர்ப்பலகைகள் மற்றும் வேறு | 34,066.06 | 17,226.06 |
| புத்தகங்கள் | 31,036.06 | 46,381.43 |
| **மொத்தம்** | **11,824,902.00** | **10,326,283.91** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு**

| குறிப்பு : 15 | 2017 | 2016 |
|---|---|---|
| **இருப்பு மதிப்பீடு** (15.1) | ரூ. | ரூ. |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 264,187.98 | 230,322.35 |
| அலுவலக உபகரண பராமரிப்பு | 281,771.44 | 198,521.44 |
| **மொத்தம்** | **545,959.42** | **428,843.79** |

| குறிப்பு : 16 | 2017 | 2016 |
|---|---|---|
| **பெறக்கூடிய வருமானம்** (16.1) | ரூ. | ரூ. |
| ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 450,000.00 | 502,000.00 |
| இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 815,500.00 | 318,000.00 |
| மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டங்கள் | 272,000.00 | 564,800.00 |
| விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 2,850,588.00 | |
| டிப்ளோமா வருமானம் | 4,850,000.00 | 2,970,750.00 |
| சான்றிதழ் பாடநெறி | 672,000.00 | 486,000.00 |
| சேவைத்தள நிகழ்ச்சித்திட்டங்கள் | | 329,000.00 |
| செயலமர்வுகள் | 1,249,500.00 | 76,500.00 |
| பரீட்சைகள் | 1,552,840.00 | 43,900.00 |
| மீண்டெழும் திருப்பிச் செலுத்தல்கள் | | 549,223.16 |
| மூலதன மீளச்செலுத்தல்கள் | 110,001.17 | 941,603.30 |
| வெளிநாட்டுப் பயிற்சி - இந்தியா | | 1,785,482.50 |
| கொதிகலன் செலவு STC | | 14,820.00 |
| **மொத்தம்** | **12,822,429.17** | **8,582,078.96** |

தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்
2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு

| குறிப்பு : 17 | 2017 | 2016 |
|---|---|---|
| முற்பணம் பெறுதல் | ரூ. | ரூ. |
| UN Women கருத்திட்டம் | 434.850.52 | 531,243.75 |
| **மொத்தம்** | **434.850.52** | **531,243.75** |

| குறிப்பு : 18 | 2017 | 2016 |
|---|---|---|
| காசு முற்பணம் | ரூ. | ரூ. |
| ஊழியர் கடன்கள் | 2,500.00 | 57,166.00 |
| முற்பணம் - டிப்ளோமா உடை | 2,000,000.00 | 64,800.00 |
| **மொத்தம்** | **2,002,500.00** | **121,966.00** |

| குறிப்பு: 19 | 2017 | 2016 |
|---|---|---|
| பணம் மற்றும் அதற்குச் சமமான | ரூ. | ரூ. |
| இலங்கை வங்கி, நுகேகொடை, A/C 0071451995 | 6,728,660.08 | 16,179,257.21 |
| **மொத்தம்** | **6,728,660.08** | **16,179,257.21** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று உரிய குறிப்பு**

| குறிப்பு : 20 | 2017 | 2016 |
|---|---|---|
| **<u>தேறிய செலவுகள்</u>**(21.1) | ரூ. | ரூ. |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 5,026.88 | 4,750.83 |
| பதிற்கடைமை கட்டணம் | 727.27 | 52,272.86 |
| உள்நாட்டுப் பயணங்கள் | 4,550.00 | |
| பத்திரிகை | 80.00 | 460.00 |
| பாதுகாப்பு கட்டணம் | 83,562.17 | 83,562.17 |
| நீர் | 6,065.38 | 3,119.73 |
| துப்புரவுச் செலவு | 110,457.90 | 133,995.61 |
| தொலைபேசி | 34,729.47 | 34,348.31 |
| ஆளனி சம்பளம் | 27,801.54 | 8,712.00 |
| சம்பளம் | 4,500.00 | 8,000.00 |
| ETF | 2,613.46 | 512.13 |
| EPF | 392.86 | 76.82 |
| அலுவலக உபகரணப் பராமரிப்பு | | 5,936.29 |
| வேறு கொடுப்பனவுகள் | 349,352.06 | 2,965.89 |
| ஓய்வூதியம் | | 2,202.00 |
| பரிசளிப்பு விழா | | 21,000.00 |
| பொதுவான கணக்காய்வுச் செலவுகள் | 158,700.00 | 218,880.00 |
| பரீட்சைகள் | 362,472.50 | 101,525.00 |
| Monitoring & Evaluation – SLAVA டிப்ளோமா | 256,200.00 | 800,000.00 |
| கருத்திட்ட செலவுகள் | 30,107.03 | |
| மின்சாரம் | 77,393.10 | |
| Secondment படிகள் | 131,119.00 | |
| Lecture fee | 232,400.00 | |
| விளம்பரச் செலவுகள் | 29,900.00 | |
| **மொத்தம்** | **1,908,150.62** | **1,482,319.64** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு**

| குறிப்பு : 21 | 2017 | 2016 |
|---|---|---|
| **கடந்த வருடம் தொடர்பாக மீள்மதிப்பீடு செய்தலை இணக்கம் செய்தல்.** | ரூ. | ரூ. |
| குணக்காய்வு கட்டணம் | (1,920.00) | (165,600.00) |
| குறுகியகால நிகழ்ச்சித்திட்டங்கள் | (284,800.00) | (153,000.00) |
| டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் | (275,500.00) | |
| மோட்டார் வாகனங்கள் | | (1,250,000.00) |
| தேய்வுக்கான ஏற்பாடுகள்: மோட்டார் வாகனம் | | 250,000.00 |
| கருத்திட்ட செலவுகள் - ILO | | (150,000.00) |
| ஆமைச்சு கணக்குகள் | | (56,000.00) |
| புதிற்கடமை கட்டணங்கள் | 626.36 | |
| டிப்ளோமா பரிசளிப்பு விழா | 18,000.00 | |
| பரீட்சை செலவுகள் | 400.00 | |
| UN கருத்திட்டம் | (531,243.75) | |
| நிறுத்தி வைத்தல் வரி | (8,079.81) | |
| நிலையான வைப்பு வட்டி | 323,191.91 | |
| **மொத்தம்** | **(759,325.29)** | **(1,524,600.00)** |

| குறிப்பு : 22 | 2017 | 2016 |
|---|---|---|
| **மூலதன மீளச் செலுத்தல்கள்** | ரூ. | ரூ. |
| மூலதன மீளச் செலுத்தல்கள் (23.1) | 3,000,000.00 | 2,481,015.30 |
| **மொத்தம்** | **3,000,000.00** | **2,481,015.30** |

**தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்**
**2017.12.31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்குரிய குறிப்பு**

| குறிப்பு : 23 | 2017 | 2016 |
|---|---|---|
| <u>நடப்பு ஆண்டிற்கான இணக்கம் 2016</u> | ரூ. | ரூ. |
| அமைச்சு ஆளனியினருக்கான சம்பளங்கள் (23.1) | 1,563,007.04 | 1,802,896.47 |
| திணைக்கள ஆளனியினருக்கான சம்பளங்கள் | | 880,290.14 |
| வெளிழநாட்டு சுற்றுலா – பணிப்பாளர் நாயகம் | 670,478.06 | |
| மோட்டார் வாகன பராமரிப்பு – பணிப்பாளர் நாயகம் | 11,300.00 | |
| **மொத்தம்** | **2,244,785.10** | **2,683,186.61** |

| குறிப்பு : 24 | 2017 | 2016 |
|---|---|---|
| <u>வழிநடத்தற் செயற்பாடுகளுக்கான இணக்கம்</u> | ரூ. | ரூ. |
| பொதுவான கணக்காய்வு செலவுகள் | (1,920.00) | (165,600.00) |
| குறுகியகால நிகழச்சித்திட்டங்கள் | (284,800.00) | (153,000.00) |
| டிப்ளோமா பாடநெறிகள் | (275,500.00) | |
| கருத்திட்ட செலவுகள் -ILO | | (150,000.00) |
| ஆமைச்சு கணக்குகள் | | (56,000.00) |
| புதிற்கடமை கட்டணங்கள் | 626.36 | |
| டிப்ளோமா பரிசளிப்பு வைபவம் | 18,000.00 | |
| பரீட்சை செலவுகள் | 400.00 | |
| UN கருத்திட்டம் | (531,243.75) | |
| நிறுத்தி வைத்தல் வரி | (8,079.81) | |
| நிலையான வைப்பு வட்டி | 323,191.91 | |
| வெளிழநாட்டு சுற்றுலா – பணிப்பாளர் நாயகம் | 670,478.06 | |
| மோட்டார் வாகன பராமரிப்பு – பணிப்பாளர் நாயகம் | 11,300.00 | |
| **மொத்தம்** | **(77,547.23)** | **(524,600.00)** |

## 4.0 கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கை

C-079

# ජාතික විගණන කාර්යාලය
# தேசிய கணக்காய்வு அலுவலகம்
# NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } එල්ඊඩබ/ඒ/එන්අයිඑල්එස්/1/17 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2018 දෙසැම්බර් 05 දින

03 JAN 2019

සභාපති,

ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනය

**ජාතික ශ්‍රම අධ්‍යයන ආයතනයේ 2017 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2018 ඔක්තෝබර් 05 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඊ.ඒ.පී.ආනන්ද
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත් - 1. ලේකම්, කම්කරු හා වෘත්තීය සමිති සබඳතා සහ සබරගමුව සංවර්ධන අමාත්‍යාංශය.
2. ලේකම්, මුදල් හා ආර්ථික කටයුතු අමාත්‍යාංශය.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.auditorgeneral.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

[...]ගේ අංකය / எனது இல. / My No. } ஏல்ஈடபிள்யூ/ஏ/என்ஐஎல்எஸ்/1/17 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2018 ஒக்தோபர் 05

தலைவர்
தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

**தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் 2018 யூன் 30 இல் ஒரு விரிவான அறிக்கை அதன் நிறுவனத் தலைவருக்கு வழங்கப்பட்டது

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.auditorgeneral.gov.lk

1.3 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

2

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் 40 ஆம் பந்தியின் பிரகாரம் தனித்தனியாக காட்டப்பட வேண்டிய வட்டியிலிருந்து பெறப்பட்ட காசானது ரூபா 1,467,752 வட்டி வருமானம் மற்றும் ரூபா 210,385 பிடித்துவைத்தல் வரி மற்றும் ஆண்டிற்கான ரூபா 10,000,000 முதலீட்டுத் தொகை என்பவற்றை சீராக்கிய பின்னர் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 11,678,177 ஆக காட்டப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றானது பயன்படுத்த தொடங்கியதற்கு பின்னர் செய்ய வேண்டிய பெறுமானத்தேய்வானது கொள்வனவு செய்த ஆண்டு முழுவதிற்கும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. ஆண்டிற்கான பெறுமானத்தேய்வானது ரூபா 280,819 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09**

நிறுவனமானது மேற்சட்டைகளை அச்சிடுவதற்காக ரூபா 553,526 தொகையை செலவழித்திருந்ததுடன் செலவழிக்கப்பட்ட தொகையானது ஆண்டிற்கான செலவினமாக முழுமையாக பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 181,322 தொகையான மேற்சட்டை இருப்பு இருந்த போதிலும், நிறுவகமானது பந்தி 12(எ) இன் பிரகாரம் இதனை இறுதி இருப்பாக வெளிப்படுத்தியிருக்காததுடன் இதனால், ஆண்டின் மிகை ரூபா 181,322 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10**

2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகள் தொடர்பிலான வருமானமொன்றை உள்ளடக்குகின்ற 2017 ஆம் ஆண்டிற்கான டிப்ளோமா பாடநெறிகளிலிருந்தான ரூபா 7,263,000 தொகையை நிறுவகம் கணக்கீடு செய்திருந்தது. வழங்கப்பட்ட சேவைகளுக்கான வருமானத்தை இனங்காணும் போது கொடுக்கல் வாங்கல்களின் இறுதி நிலைமையானது பந்தி 19 இன் பிரகாரம் தீர்மானிக்கப்பட வேண்டும்.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிறுவகமானது ஐயக் கடன்களிற்காக எந்தவொரு ஏற்பாட்டையும் வழங்கியிருக்கவில்லை. பாடநெறிகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்தான பெறவேண்டிய வருமானங்கள் மற்றும் பாடநெறிகளை இடைநிறுத்திய மாணவர்களிடமிருந்து பெறவேண்டிய தொகை அறவிடமுடியாத தொகையொன்றாக இருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 592,885 தொகையான இரண்டு நிலையான வைப்புக்களிலிருந்தான வட்டி வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

(ஆ) நிறுவனத்தின் சம்பளங்களை கணக்கீடு செய்யும் போது, தேறிய சம்பளத்திற்குப் பதிலாக மொத்தச் சம்பளத்தை சீராக்கியமையால் ஊழியர் சம்பளமானது நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 349,694 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) ரூபா 524,541 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் 12 சதவீதமான நிறுவகத்தின் பங்கானது நிறுவகத்தின் செலவினமாக காட்டப்பட வேண்டிய போது ஊழியர்களின் பங்குகளுடனான ஊழியர் சேமலாப நிதியத்தின் 20 சதவீத பங்கான ரூபா 874,235 தொகை ஆண்டிற்கான செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகையானது ரூபா 349,694 ஆல் குறைக்கப்பட்டது.

(ஈ) 2016 -2017 இல் பதிவு செய்யப்பட்ட 10 மாணவர்கள் தொடர்பில் பாடநெறிக் கட்டண வருமானம், ஒருவருக்கு ரூபா 77,000 படி மொத்தம் ரூபா 770,000 தொகையானது 2016 ஆம் ஆண்டிற்கான வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. இருந்த போதிலும், பாடநெறிகளை விட மாணவர்களிடமிருந்து நிறுவகத்திற்கு மேலும் கிடைக்க வேண்எய ரூபா 441,500 தேறிய வருமானம் திரட்டு நிதியத்திற்கு சீராக்கஞ் செய்யப்பட்ட வேண்டும். இருந்த போதிலும், ரூபா 275,500 தொகை மாத்திரம் சீராக்கஞ் செய்யப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2010 இன் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சட்டத்தின் 17 நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தொழிற்சங்க கற்கைப் பிரிவு நிறுவப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

**நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 5,149,301 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 329,186 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 4,820,115 வளர்ச்சியைக் காட்டியது. செயற்பாட்டு செலவினம் ரூபா 7,550,935 இனால் அதிகரித்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 9,884,139 இனால் அதிகரித்தமையும் திறைசேரியிடமிருந்து மீண்டெழும் மானியம் ரூபா 2,486,912

5

இனால் அதிகரித்தமையும் நிதிசார் விளைவின் வளர்ச்சிக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டுடன் கடந்த நான்கு வருடங்களின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, ஆளணி வேதனங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளுமிடத்து 2013 ஆம் ஆண்டில் நிதிசார் விளைவுகள் ரூபா 502,932 மிகையாக இருந்ததுடன் 2017 இல் ரூபா 5,149,301 ஆக அதிகரித்தது. 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 2,458,919 இற்கு தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 14,718,856 அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

குறுங்கால மற்றும் நீண்டகால தூரநோக்குடன் முகாமை செய்வதற்கான கூட்டிணைந்த திட்டம் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் பிரேரிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலக மற்றும் தகவல் சேவையை தாபிப்பதும் பராமரிப்பதும் நிறுவகத்தின் முதன்மை நோக்கமாக இருந்த போதிலும், முறையான நூலகமொன்றைத் தாபித்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு நிறுவனம் தவறியமையால் அங்கு மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நூலகமொன்றிருந்திருக்கவில்லை.

(ஆ) சஞ்சிகைகள், நாட்குறிப்புக்கள், பருவகால வெளியீடுகள் மற்றும் புத்தகங்களைப் பிரசுரித்தல் என்பன நிறுவகச் சட்டத்தின் ஒரு நோக்கமாக இருந்த போதிலும், அவற்றிற்கான தந்ரோபாய நிகழ்சித்திட்டங்களை நிறுவகம் கொண்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 03 நன்கொடை நிதியளிக்கும் (Donor Funded) செயற்திட்டத்திற்காக ரூபா 1.5 மில்லியன் தொகையொன்று மதிப்பிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டில் எந்த செயற்திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) இரண்டு ஆராய்ச்சி செயற்திட்டங்களிற்காக (Research Project) நிறுவனமானது ரூபா 1 மில்லியன் தொகையை மதிப்பிட்டிருந்த போதிலும், இலக்கின் 50 சதவீதத்தினை அடைந்திருந்த ரூபா 1.2 மில்லியன் செயற்திட்டமொன்று மாத்திரம் நிறுவகத்தால் அடையப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட ஒரு நாள், இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் மற்றும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களிற்கான திகதியில் அதற்கு முன்னர் பங்குபற்றல் கொடுப்பனவுகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், இதனை நிறைவேற்றாமையால் 08 நிறுவனங்களிடமிருந்து 2018 மார்ச் இலும் ரூபா 92,000 கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லையென மீளாய்வாண்டில் நடைபெற்ற மாதிரிப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்கான பாடநெறித் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு மாணவர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகளால், பாடநெறிக் கட்டணங்களிற்காக பதிவழிக்கப்பட்ட ரூபா 284,800 தொகை குறுகிய கால பாடநெறிகளிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 விசேட நிகழ்ச்சித்திட்டங்கள், டிப்ளோமா பாடநெறிகள், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் பரீட்சைகள் நடாத்துதல் மீதான இனங்காணப்பட்ட பெறவேண்டிய வருமானத்தின் தேறல் மீதான பின்தொடர் நடவடிக்கைகளிலுள்ள குறைபாடுகளில் ரூபா 10,502,928 தொகையினை மீளாய்வாண்டின் இறுதியளவில் அறவிடப்படமுடிந்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) யூஎன் பெண்கள் (UN Women) மற்றும் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்திற்கிடையில் 2016 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், ஆராய்ச்சி செயற்திட்டமானது 2016 ஏப்ரல் 01 இலிருந்து 2017 திசெம்பர் 31 வரையிலும் பெண்களின் வேலைவாய்ப்பிற்காக அமுல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். 72 சதவீத செயற்திட்டம் பணம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவிலும் ஆரம்ப அளவை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. மேற்கூறப்பட்ட நிறுவகத்தின் நிதிசார் விதிகள் நிறுவகத்தால் பின்பற்ற முடிந்திருக்காமையால், ரூபா 558,263 தொகையான கொடுக்கப்பட்ட முற்பணங்களில் 2017 செப்தெம்பர் 04 இல் குறிப்பிடப்பட்ட நிறுவகத்திற்கு மீண்டும் செலுத்தப்பட்டது.

(ஆ) நிறுவகத்திற்கு பாதுகாப்பு சேவையை வழங்கவதற்காக தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், இணங்கப்பட்ட காலப்பகுதியானது 2017 ஒக்தோபர் 16 இல் காலங்கடந்திருந்தது. ஆனால் சேவையை காலநீடிப்புச் செய்யாமல் 2017 திசெம்பர் வரை சேவை பெறப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்காக ரூபா 247,990 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.4 நிதியத்தின் குறைவான பயன்பாடு

2017 சனவரியிலிருந்து 2017 செப்தெம்பர் வரை வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 4,275,752 இலிருந்து ரூபா 21,411,748 வரையான மீதிகளிலிருந்தது. 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் தேசிய தொழில் கற்கைகள் அதிகாரச்சட்டத்தின் 4(ஈ) பிரிவின் பிரகாரம், மிகையாகவுள்ள காசானது உரிய தரப்பினரிடமிருந்தான அனுமதியுடன் வருமானத்தை உழைப்பதற்கு முதலிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தொழிற்படு மூலதன தேவைப்பாடானது அந்த சுற்றறிக்கை 4.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் இயக்குனர் சபையால் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.5 ஆளணி முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 45 ஆக இருந்ததுடன் 03 உயர் முகாமைத்துவ மட்ட பதவிகள், 07 மூன்றாந்தரப் பதவிகள்ஈ 10 இரண்டாந்தர மட்ட பதவிகள் மற்றும் 02 முதற்தர மட்ட பதவிகள்

போன்றன ஒன்றுசேர்த்து 22 பதவிகள் வெற்றிடமாகவிருந்தது. ஆண்டிற்கான அற்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தி

### 5.1 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

2030 நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ஐக்கிய தேசத்தின் பிரகாரம், ஒவ்வொரு பொது நிறுவகமும் "நிகழ்ச்சித் திட்டத்தின்" பிரகாரம் நடாத்தப்பட வேண்டுமென்பதுடன் நிறுவனமானது மீளாய்வாண்டுடன் தொடர்பாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் எல்லைக்குள் அதனுடைய தொழிற்பாடுகளை எவ்வாறு செயற்படுத்த வேண்டுமென கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(அ) நிலைபெறுதகு அபிவிருத்தி, இலக்குகள், எல்லைகள், மைல்கற்கள் மற்றும் குறிகாட்டிகள் மீதான ஐக்கிய தேசங்கள் 2030 "நிகழ்ச்சித்திட்டம்" பற்றி கவனஞ் செலுத்தாமையால், நிறுவகத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் கவனஞ் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளக கணக்காய்வு

2017 ஆம் ஆண்டிற்கான நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வானது ஊழியர் மற்றும் வியாபார கழக தொடர்புகள் அமைச்சினால் நிதிப்பிரமாணம் 133(ஆ) இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது நிறுவகம் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்கர்வாளர் பதவியொன்று தொழில் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உருவாக்கப்பட்ட போதும் உரிய பதவியானது மீளாய்வாண்டின் இறுதியளவில் வெற்றிடமாகவிருந்தது.

### 6.2 பாதீட்டு கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதீடு மற்றும் உண்மையான செலவினம் தொகைகளுக்கிடையில் 100 சதவீதம் தொடக்கம் 506 சதவீதம் வரை முரண்களின் வீச்சு அவதானிக்கப்பட்டமையால் முகாமைத்துவ கட்டுப்பாட்டுக்கான ஒரு வினைதிறனான கருவியாக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதனை காட்டுகின்றது.

7. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப் பாட்டுத் துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) தகவல் தொழிநுட்பம் மீதான பொதுக்கட்டுப்பாடு | நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற கற்கைகள் தொடர்பில் தரவுத்தளம் ஒன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பெறுகை செய்முறை | (i) விலைமனுவிற்கான அழைப்பு அறிவித்தல் விலைமனு திறத்தல் திகதி, நேரம் மற்றும் இடத்தை குறிப்பிடாமல் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) விலைமனு திறத்தல் குழுக்களின் அனுமதியில்லாமை. |
| | (iii) பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் விலைமனு திறத்தலிற்காக குறித்துரைக்கப்பட்ட படிவங்களை நிறுவகமானது பயன்படுத்தியிருக்கவில்லையென்பதுடன் குழு உறுப்பினர்கள் கைச்சாத்திட்டிருக்கவில்லை. |
| | (iv) விலைமனு அழைப்பு ஆவணங்கள் நிறுவகத்தின் தேவைப்பாடுகளிற்கு இணங்காமல் வரையப்பட்டிருந்தது. |

**ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி